People’s Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520   Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org  Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் – தொகுப்பு
# 12.07.2009 முதல் 18.07.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 238. | 12.07.09 | **கரூர் மாவட்டம்:** வடிவேலுநகர் போலீஸ் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த பாலசுப்ரமணியன் மனைவி முருகவள்ளி போக்குவரத்து போலீசில் பணியாற்றியவர். சம்பவத்தன்று நடைபெற்ற குடும்ப பிரச்சனையில் முருகவள்ளியை பாலமுருகன் கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை. | |
| 239. | 12.07.09 | **மதுரை மாவட்டம்:** பசும்பொன் நகரைச் சேர்ந்தவர் ரமேஷ் மனைவி மகேஸ்வரி ராமநாதபுரத்தில் கல்லூரி பேராசிரியராக வேலை பார்த்து வந்தார். இவர் விடுமுறைக்கு மதுரை வந்து மீண்டும் இராமநாதபுரம் செல்லும்போது மர்ம நபர்கள் வேனில் கடத்தி நகை பறிக்க முயற்சி. இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. | தமிழ்சுடர் |
| 240. | 12.07.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** மேலச்செவலைச் சேர்ந்த முருககுட்டி (27) கற்பழிப்பு வழக்கில் தண்டனை பெற்று பாளையங்கோட்டை மத்திய சிறையில் உள்ளார். இவர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார். இதனால் இவருடன் யாரும் பழகவில்லை. இதனால் மனமுடைந்தவர் பிளேடால் கழுத்தை அறுத்து தற்கொலைக்கு முயற்சித்துள்ளார். இது பற்றி போலீசார் விசாரணை. | சிறை கைதி தற்கொலைக்கு முயற்சி. | தினமலர் |
| 241. | 12.07.09 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை கார்ப்பரேசன் வீதி செல்லம் மனைவி முத்துமீனாள் கொலை வழக்கில் மதுரையில் உள்ள கல்லூரியில் மாணவர் உட்பட இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை. | தினமலர் |
| 242. | 12.07.09 | **தேனி மாவட்டம்:** கடமலை மயிலை ஒன்றியம் உப்புத்துறை அருகே உள்ள ஆத்துக்காடு கிராம ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவர்கள், குடிநீர், கழிப்பிட வசதியில்லாமல் பெரும் அவதிப்படுகின்றனர். அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். | அடிப்படை வசதியின்மை | தமிழ்சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 243. | 12.07.09 | **திருப்பூர் மாவட்டம்:** பல்லடம் அருகே உள்ள கணபதிபாளையம் பஸ் நிலையம் அருகே குப்பை மேட்டில் பிறந்து சில நாட்களே ஆன குழந்தை இறந்து கிடந்தது. இது பற்றி போலீசில் புகார். | .குழந்தை சிசு | தமிழ்சுடர் |
| 244. | 12.07.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** அச்சரப்பாக்கம் ஒன்றியம் எண்டத்தூர் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் தணிகாசலம் கடந்த மாதத்தில் ஒரு பெண் காணாமல் போனார். இது பற்றி உத்திரமேரூர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார். ஆனால் புகார் மீது எவ்வித நடவடிக்கையும் இல்லை. மேலும் கடந்த 7ம் தேதி நடைபெற்ற இலவச டிவி வழங்கும் நிகழ்ச்சியில் தகராறு ஏற்பட்டுள்ளது. இது பற்றி புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. இந்நிலையில் உத்திரமேரூர் இன்ஸ்பெக்டர் கண்ணன் வழக்கில் விசாரணைக்காக தணிகாசலத்தை விசாரிக்க வந்த போது இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் போலீசாரை சிறை வைத்தனர். | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 245. | 12.07.09 | **புதுக்கோட்டை மாவட்டம்:** அறந்தாங்கி நூறு நாள் வேலைத் திட்டத்தில் கூலி குறைவாக கொடுக்கப்பட்டதைக் கண்டித்து 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். | 100 நாள் வேலை உறுதி. | தீக்கதிர் |
| 246. | 13.07.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** வல்லம் டி.எஸ்.பி வசுந்தரா 11ஜீலை 09அன்று வல்லம் பகுதி போலிசாருக்கு ஆலோசனை கூட்டம் நடத்தினார் பின்னர் அனைத்து மகளிர் காவலல்நிலைய இன்ஸ்பெக்டர் வசந்தாவிடம் காசாநாடு கூறியுள்ளார் இகற்க்கு உடல் நிலை சரியில்லாததால் வசந்தா போக முடியாது என மறுத்துள்ளார் இதற்க்கு டி.எஸ்.பி வசந்தா இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.இந்நிலையில் டி.எஸ்.பி. வசந்தாலை தாக்கியதாக மருததுவனையில அனுமதி. | பெண்களுக்கு எதிரான வன்முறை. காவலர் வண்முறை | தினகரன் |
| 247. | 13.07.09 | **புதுக்கோட்டை மாவட்டம்:** வில்லியனூர் நடந்த இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் தேர்தலில் கலாட்ட ஏற்பட்டதால் போலிசார் தடியடி நடத்தினர். | காவலர் வன்முறை. | தினதந்தி |
| 248. | 13.07.09 | **சிவகங்கை மாவட்டம்:** காளைளயர் கோவில் ஒன்றியம் 1மறவ மங்கலம் அருகே உள்ள பால்குளம் வருவாய் கிராமத்திற்குட்பட்ட களப்பிளான் கிராம தலித் விவசாயி கொளிகன். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை. | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சிவகங்கை மாவட்டத்தில் 35 ஆண்டுககளாக உழவுதுறை செய்து வரும் தலித் விவசாயி கொங்கள் நிலத்தை அபகரிக்கும் நோக்கில் சாதி ஆதிக்கயினார்தாக்குதல் நடத்தி வருகின்றனர். இது பற்றி 12 முறை புகார் செய்தும் ந்வடிக்கை இல்லை | | |
| 249. | 13.07.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** தமிழ்நாட்டில் ஒரு ரூபாய்க்கு 1கிலோ அரிசி வழங்கப்படும் ரேஷன் அரிசியை கடத்தி சென்று கர்நாடகா மாநிலத்தில் விற்பனை செய்து வருகின்றனர் இவ்வாறு கொண்டுவரப்பட்ட 216 மூட்டை ரேஷன் அரிசியை கிருஷ்ணகிரி மாவட்ட எல்லையில் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். | ரேசன் அரிசி கடத்தல் | தீக்கதிர் |
| 250. | 14.07.09 | **சென்னை மாவட்டம்:** மூன்றாவது காவல் ஆணையம் காவலர் குடியிரப்புகளுக்காக முதல்வரிடம் பரிந்துறை மூன்றாவது காவல்ஆணைய பரிந்துறையின் படி 2011–12ம் ஆண்டிற்குள் காவலார்குடியிருப்புகள் கட்ட அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக பேரவையில் முதல்வர் கருணாநிதி தெரிவித்தார். | காவலர் ஆணையம் முதல்வருக்கு பரிந்துரை | ஜனசக்தி |
| 251. | 14.07.09 | **சென்னை மாவட்டம்:** விலை வாசி உயர்வதால் கண்ணீர்வடும சாதரணக் குடும்பங்கள் ஐக்கிய முற்போக்கு கூட்டணியினன்இரண்டாவது அரசின் அமைச்சர்கள் பதிவி யேற்ற நூறு நாட்களுக்குள் என்னென்ன அறிவிப்புகளை வெளியிடலாம் என ஆலோசிக்கின்றனர். ஆனால் சாதரண மக்கள் உயர்ந்து வரும் உணவு தானியங்கள் எரிபொருள் மற்றும் காய்கறிகள் விலையில் அல்லலுற்று வரகின்றனர். | விலைவாசி உயர்வு | ஜனசக்தி |
| 252. | 14.07.09 | **மாவட்டம்:** முகாம்களிலிருந்து காயமடைந்தவர்களை கவிடுதலை செய்ய டியுஎல்எஃப் தலைவர் வேண்டுகோள் போர் நடவடிக்கைகளின் போது காயமடைடந்தவர்களள்முதியோர் கர்ப்பிணிப் பெண்கள் குழந்தைகளுடன் உள்ள தாய்மார்கள், ஊனமுற்றவர்கள் அநாதைகள் மிகவும் வறியவர்கள ஆகியோரைக் தற்காலிக நிவாரன முகாம்களிலிருந்து தங்கள் வீடுகளுக்குத் அனுப்புமாறு டியுஎல்எப் தலைவார் வி.ஆனந்த சங்கரி அதிபர் ராஜபக்சேவுக்கு கடடிதம் எழுதியுள்ளார். | டியுஎல்எஃப் தலைவர் வேண்டுகோள் | ஜனசக்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 253. | 14.07.09 | **மதுரை மாவட்டம்:** திரும்புவனம் அருகில் உள்ள பசியாபிரத்தை சேர்ந்த மணி மகள் பிரேமா (17/09) பிரேமா விற்கு கடந்த 10 நாட்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றுள்ளது. பிரேமாவை அப்பகுதியை சேர்ந்த ஆனந்த் 15 பவுன் தங்நகைகளுடன் பத்தியிரம் பணம் ரொக்கத்துடன் கடத்தியதாக மணி போலிசில் புகார் வழக்கு பதிவு செய்து விசாரனை. | பெண்களுக்கு எதிரான வன்முறை. வரதட்சணைக் கொடுமை | தமிழ் சுடர் |
| 254. | 14.07.09 | **இராமநாதபும் மாவட்டம்:** தேவிப்பட்டினம் அடுத்தள்ள பழனிவேல் கிராமத்தை சேர்ந்த ஞானசேகரன் மகள் அஜிதா. அஜிதாவை பழனிவேல் கிராமத்தில் உள்ள பள்ளியை விட்டு வெளியூர் சித்தார் கோட்டை இதனையடுத்து பழனிவேல் கிராமத் தலைவர் வாசிநாதன் மற்றும் முக்கிய பமிரமுகர்கள் சேர்ந்து கொண்டு வெளியூர் பள்ளியில் அபராதம் விடுத்துள்ளனர். இது பற்றி ஞானசேகரன் தேவிபட்டிணம் போலிசார் புகார். | கட்ட பஞ்சாயத்து | தமிழ்சுடர் |
| 255. | 14.07.09 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி இந்திரா நகலைச் சேர்ந்த மீனா கணவர் பெயர் காளிமுத்து. இருவருக்கும் இடையே அடிக்கடி குடும்பத் தகராறு இருந்து வந்துள்ளது. இந்நிலையில் சம்பவத்தன்று ஏற்பட்ட பிரச்சனையால் காளிமுத்து மீனாவை அரிவாள்மனையால் வெட்டியுள்ளார். இதில் பலத்த காயமடைந்த மீனா மருத்துவமனையில் அனுமதி. | பெண்களுக்கு எதிரான வன்முறை. | தினமலர் |
| 256. | 14.07.09 | **சென்னை மாவட்டம்:** ஆதம்பாக்கத்தில் 10 கோடி ரூபாய் மதிப்புள்ள 8.75 ஏக்கர் நிலம் உள்ளது. இதை ஒரு கும்பல் போலி ஆவணம் தயாரித்து அபகரிக்க முயன்றது. அதற்கு உடந்தையாக இருந்த வி.ஏ.ஓ ஸ்ரீதரன் பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு. | அரசு ஊழியர் வன்முறை. | தினமலர் |
| 257. | 14.07.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** பேட்டையை பூர்வீகமாக கொண்ட பால்ராஜ் மகள் கவிதா (28). கவிதா குடும்பத்துடன் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்தார். அப்பொழுது திருச்சியை சேர்ந்த கார்த்திக் என்பவரை காதலித்து நிச்சயதார்த்தம் நடந்துள்ளது. இருவரும் ஒரு வருடம் குடும்பம் நடத்தியுள்ளனர். இந்நிலையில் கார்த்திக் கவிதாவிடம் சொல்லாமல் அங்கிருந்து இந்தியா வந்து விட்டார். இதுபற்றி இந்தியா வந்த கவிதா திருச்சி காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 258. | 14.07.09 | **மதுரை மாவட்டம்:** திருப்புவனம், அருகே உள்ள பிரமனூர் ஊராட்சி தலைவர் பஞ்சவர்ணம், துணைத் தலைவர் கருப்பையா, எழுத்தாளர் பெரியராமச்சந்திரன் ஊராட்சியின் 3வது திட்ட நிதியில் இருந்து ரூ. 3 லட்சத்து 80 ஆயிரம் 465ஐ கையாடல் செய்துள்ளனர். இது பற்றி புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. வரதட்சணைக் கொடுமை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 259. | 15.07.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே நூறுநாள் வேலை திட்டத்தின் கீழ் கூலியை உயர்த்தித் தரக்கோரி பயனாளிகள் சாலை மறியல். | சாலை மறியல் | தினமணி |
| 260. | 15.07.09 | **மதுரை மாவட்டம் :** செல்லூர் 60அடி ரோட்டைச் சேர்ந்த சுப்பிரமணியன் மனைவி சாந்தி பணப்பிரச்சனை காரணமாக கணவன் மனைவிக்கிடையே அடிக்கடி தகராறு ஏற்படுவதுண்டு. இந்நிலையில் சம்பவத்தன்று ஏற்பட்ட பிரச்சனையில் சாந்தி மண்ணெண்ணையை ஊற்றி தீ வைத்துக் கொண்டார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 261. | 15.07.09 | **சிவகங்கை மாவட்டம் :** திருப்பத்தூர் ஒன்றியம் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ. 5 லட்சம் முறைகேடு செய்வதாக வட்டார வளர்ச்சி அலுவலர் கொடுத்த புகாரின் பேரில் பஞ்சாயத்து தலைவர் உட்பட 3 பேர் மீது வழக்கு பதிவு. | | தினகரன் |
| 262. | 15.07.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** வத்தலக்குண்டு அருகே விராலிப்பட்டியைச் சேர்ந்த ராமசாமி மகன் சதீஸ்குமார் நிலத்தின் பட்டாவை மாறுதல் செய்து தர ரூ. 6 ஆயிரம் லஞ்சம் வாங்கிய சர்வேயர் ராமராஜன் போலீஸில் புகார். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 263. | 15.07.09 | **சென்னை மாவட்டம் :** தமிழகம் முழுவதும் ஒரே மாதிரியான சமச்சீர் கல்விமுறை அமல்படுத்த வேண்டும் என்று இந்திய மாணவர் சங்கத்தினர் தடையை மீறி கோட்டையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். போலீஸார் எதிர்ப்பை மீறி கோட்டைக்குள் நுழைந்ததால் போலீசார் சரமாரியாக தாக்கியுள்ளனர். இதற்கு பதிலாக மாணவர்களும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். 15 மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதி. | காவல்துறை வன்முறை | தினமலர் |
| 264. | 15.07.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** ஒட்டன்சத்திரம் அருகேயுள்ள பழையபட்டியைச் சேர்ந்த வெங்கடாஜலபதியின் மகளை அப்பகுதியினர் கடத்திச் சென்றுவிட்டதாக போலீசில் புகார். வழக்குப் பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 265. | 15.07.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** தொண்டி அருகே நம்புதளை ஆதிதிராவிடர் காலணியில் 300க்கும் மேற்பட்ட சுனாமி வீடுகள் கட்டப்பட உள்ளன. இதை போட்டோ எடுக்கும் பணிக்காக ரூ. 100 லஞ்சம் கேட்பதாக V.A.O க்கள் மீது புகார். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| 266. | 15.07.09 | **விருதுநகர் மாவட்டம் :** வத்திராயிருப்பு அருகில் உள்ள கீழக்கோட்டையூரைச் சேர்ந்த | பள்ளி வன்முறை / | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ராஜேஸ் (13/09) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 8ஆம் வகுப்பு படிக்கிறார். இவர் விடுதிக்கு தாமதமாக வந்ததால் பாய்ஸ் முன் விடுதிக் காப்பாளர் தென்னை மட்டையால் கடுமையாகத் தாக்கியுள்ளார். இதனால் மனமுடைந்த ராஜேஸ் விஷம் குடித்து தற்கொலைக்கு முயற்ச்சி. இது பற்றி விடதி காப்பாளரிடம் கேட்க சென்ற ராஜேஸ் உறவினர்களை சாதி பெயர் சொல்லி திட்டியுள்ளார். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | |
| 267. | 16.07.09 | **சென்னை மாவட்டம் :** செம்மாஞ்சேரி தோப்பு பகுதியைச் சேர்ந்த மாலதி (13/09) வாலலூரில் உள்ள ஒரு பள்ளியில் 8ஆம் வகுப்பு படித்து வந்தார். இவர் கடந்த 8ஆம் தேதி பள்ளிக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை. இவரை அப்பகுதியைச் சேர்ந்த கதிர்வேலு என்பவர் காதலித்து, மாயாவரத்திற்கு கடத்திச் சென்று திருமணம் செய்து பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது பற்றி போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 268. | 16.07.09 | **திருச்சி மாவட்டம் :** உப்பிலியாபுரத்தைச் சேர்ந்த செல்வராஜ் தான் புதிதாக கட்டியுள்ள வீட்டிற்கு இணைப்பு பெற கடந்த 6ஆம் தேதி உப்பிலியாபுரம் துணை மின் நிலைய உதவி பொறியாளர் ஜெயஸ்ரீயிடம் விண்ணப்பித்திருந்தார். மின் இணைப்பு வழங்க ரூ. 15,000 தனக்கும், வணிக ஆய்வாளர் வெங்கடேசனுக்கு ரூ. 500ம் லஞ்சமாகக் கேட்டுள்ளார். இது பற்றி லஞ்ச போலீசில் புகார். வழக்கு பதிவு. | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 269. | 16.07.09 | **மதுரை மாவட்டம் :** சமயநல்லூரைச் சேர்ந்தவர் மலைமேகம் மனைவி கஸ்தூரிக்கும் அப்பகுதியைச் சேர்ந்த சங்கருக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை உள்ளதால் இருவருக்கும் இடையே முன் விரோதம் இருந்து வந்துள்ளது. இதனால் சம்பவத்தன்று ஏற்பட்ட பிரச்சனையில் சோடா பாட்டிலால் கஸ்தூரியை குத்தியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 270. | 16.07.09 | **மதுரை மாவட்டம் :** செல்லூர் அருகே அகிம்சாபுரம் 7வது தெருவைச் சேர்ந்த பாலசுப்பிரமணியனுக்கும் சாந்திக்கும் இடையில் அடிக்கடி குடும்பத் தகராறு ஏற்படுவதுண்டு. சம்பவத்தன்று ஏற்பட்ட பிரச்சனையில் சாந்தி மீது மண்ணெண்ணையை ஊற்றி தீ வைத்துள்ளார். இதில் சாந்தி உயிரிழந்தார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 271. | 16.07.09 | **நெல்லை மாவட்டம் :** தென் நதி மினவர்கள் தென் நதியில் இரு கோஷ்டியை சேர்ந்த மீனவர்கள் நடுக்கடலில் வெடிகுண்டுகளை வீசி | மீனவர் பிரச்சனை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மோதிக்கொண்டனர். | | |
| 272. | 16.07.09 | **விருதுநகர் மாவட்டம் :** பள்ளப்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட கடம்பன்குளம் கண்மாய் தூர்வாரும் பணியில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் வேலை பார்த்த 200 பெண்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் ரூ. 80 பதிலாக ரூ. 40 கொடுத்ததால் மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். | சாலை மறியல் | தமிழ்சுடர் |
| 273. | 16.07.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** வத்தலக்குண்டு அருகே விராலிப்பட்டி கிராமத்தில் உள்ள கண்மாயில் 5க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அனுமதியின்றி மணல் திருடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கட்டக்காமன்பட்டியை சேர்ந்த குருநாதன் என்பவர் மீது மணல் சரிந்து விழுந்தது. இதில் குருநாதன் உயிரிழந்தார். | மணல் திருட்டு | தமிழ்சுடர் |
| 274. | 16.07.09 | **நெல்லை மாவட்டம் :** மந்தியூரைச் சேர்ந்த முருகனுக்கும் அப்பகுதியில் உள்ள முனியாண்டி என்பவருக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் போலீசார் முருகன் மற்றும் முருகன் குடும்பத்தாரை தரக்குறைவாக நடத்தியுள்ளனர். இது பற்றி முருகன் தேசிய மனித உரிமை ஆணையத்தில் புகார் செய்ததால் முருகன் மீது பொய் வழக்கு பதிவு செய்துள்ளனர். | காவல்துறை வன்முறை | தினத்தந்தி |
| 275. | 17.07.09 | **கோவை மாவட்டம் :** சாந்தி இயர்ஸ் நிறுவன ஊழியர்களை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி 1200 தொழிலாளர்களை நிர்வாகம் பணிநீக்கம் செய்தது. இதனால் தொழிலாளர்கள் பணியில் மிண்டும் சேர்த்துக்கொள்ளக் கோரி நிறுவனத் தலைமையகம் முன்பு போராட்டம் நடத்தினர். அமைதியாக போராடிய தொழிலாளர்கள் மீது போலீசார் தாக்குதல் நடத்தியதோடு 200க்கும் மேற்பட்டோரை பலவந்தப்படுத்தி கைது செய்துள்ளனர். | காவல்துறை வன்முறை | தீக்கதிர் |
| 276. | 17.07.09 | **கோவை மாவட்டம் :** அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் முதலாமாண்டு மாணவரை, மூன்றாமாண்டு மாணவர்கள் பான்பராக் வாங்கித் தரச்சொல்லி ராக்கிங் செய்துள்ளனர். இது பற்றி புகார். | ராக்கிங் கொடுமை | தினகரன் |
| 277. | 17.07.09 | **மதுரை மாவட்டம் :** மேலூர் அருகே உள்ள பல்லவராம்பட்டியைச் சேர்ந்த பழனிவேல் மகள் போதும்பொண்ணு (22) மதுரை பாஸ்போர்ட் அலுவலகத்தில் தற்காலிக பணியாளராக வேலை புரிந்து வந்துள்ளார். இவருக்கும் கூடல் புதூரைச் சேர்ந்த மணிகண்டனுக்கும் இடையில் காதல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மணிகண்டனுக்கு ஏற்கனவே திருமணம் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆனவர். இதை மறைத்து காதலித்துள்ளார். இருந்த போதிலும் போதும்பொண்ணு 2வது திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தியதால், மணிகண்டன் கொலை செய்ய முயற்சித்துள்ளார். இதுபற்றி போலீசில் புகார். | | |
| 278. | 17.07.09 | **திருப்பூர் மாவட்டம் :** பெரிச்சபாளையம், கே.என்.பி காலனியைச் சேர்ந்த திருமூர்த்தி தனக்கு சொந்தமாக நிலத்தை வாங்கியுள்ளார். இதற்கு கிரையம் செய்ய ஓய்வு பெற்ற ஆர்.டி.ஓ, ஆர்.டி.ஓ வின் நேர்முக உதவியாளர் லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| 279. | 18.07.09 | **விருதுநகர் மாவட்டம் :** இராஜபாளையம், தவிழ்த்தானை சேர்ந்த ராமர் மகள் ராஜலெட்சுமி இரவு நேர பணியில் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது சக ஊழியர்கள் 3பேர் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி செய்துள்ளனர். இதுபற்றி போலீசில் புகார். மாதர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 280. | 18.07.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** ஆதிலெட்சுமி மதுரை 6வது பட்டாலியனில் போலீசாக வேலை பார்து வருகிறார். இவர் முகாமிற்கு சென்று விட்டு வீடு திருபவில்லை. இது பற்றி போலீசார் விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 281. | 18.07.09 | **மதுரை மாவட்டம் :** தல்லாகுளம், கண்மாய் மேலத்தெருவைச் சேர்ந்த அமீர்பானு வீட்டில் காணாமல் போன நகை பற்றி தல்லாகுளம் காவல் நிலையத்தில் புகார் செய்திருந்தார். ஆனால் தல்லாகுளம் போலீசார் உரிய நடவடிக்கை எடுக்காமல் அலைக்கழித்துள்ளனர். இது பற்றி போலீஸ் கமிஷனரிடம் புகார். இதனால் பணியில் ஒழுங்கின்மையாக நடந்து கொண்ட 2 இன்ஸ்பெக்டர்கள் சஸ்பென்ட். | | தினத்தந்தி |
| 282. | 18.07.09 | **சென்னை மாவட்டம் :** வியாசர்பாடியைச் சேர்ந்த சர்மா நகரைச் சேர்ந்தவர் இந்திரா, அப்பகுதியில் ஓட்டல் நடத்தி வந்துள்ளார். சில நேரங்களில் 10 மணிக்கும் மேல் கடை நடத்தியுள்ளார். இதற்கு அப்பகுதி இன்ஸ்பெக்டர் கருணாநிதி இரவு நேரங்களில் ஹோட்டல் நடத்த ரூ. 5 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார். | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 283. | 18.07.09 | **சென்னை மாவட்டம் :** புறநகர் பாடி சீனிவாசன் நகர் பாரதி தெருவில் வசித்து வரும் சுபாஷ், பிரியதர்ஷிணி கடன் பிரச்சனை காரணமாக குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | கடன் தொல்லை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 284. | 18.07.09 | **மதுரை மாவட்டம் :** கிழக்கு ஊராட்சி ஒன்றியம் மாத்தூர் கிராமத்தில் தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் ரூ. 2 3/4 லட்சம் மோசடி செய்ததால் ஊராட்சி எழுத்தர், தலைவர், துணைத்தலைவர் மீது புகார். | | தினத்தந்தி |
| 285. | 18.07.09 | **தேனி மாவட்டம் :** வருசநாடு சேர்ந்த மருதவீரன் மனைவி அமுதா. மருதவீரன் மற்றும் அமுதா கன்னியாகுமரி ஆரல்வாய்மொழியில் உள்ள செங்கல் சூளையில் வேலை பார்த்து வருகின்றனர். செங்கல் சூளையில் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வதாக அமுதா கலெக்டரிடம் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 286. | 18.07.09 | **நெல்லை மாவட்டம் :** தி.மு.க சேர்மன் கோமதி முத்துராணி பொது மக்களிடம் வசூலித்த பணத்தை மோசடி செய்ததாக புகார். இது பற்றி வழக்கு பதிவு. | | தினமலர் |
| 287. | 18.07.09 | **தூத்துக்குடி மாவட்டம் :** ஏ. குமார்புரத்தை சேர்ந்த சண்முகராஜ் (34) நிலப்பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ. 3000 லஞ்சம் கேட்டுள்ள கிராம நிர்வாக அதிகாரி கருப்பசாமி. இது பற்றி போலீசில் புகார். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| 288. | 18.07.09 | **திருச்சி மாவட்டம் :** மணப்பாறை அருகே குமாரவாடியைச் சேர்ந்த இளங்கோவன் மனைவி கௌரி. கணவன், மனைவிக்கிடையே அடிக்கடி தகராறு ஏற்படுவதுண்டு. இந்நிலையில் கௌரி தன்னுடைய மகனுடன் தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்